மாண்புமிகு திரு. க. இராசாராம்: கொடைக்கானலை விருத்தி செய்வதிலே இந்த அரசு கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். கொடைக்கானல் ஏரியிலே படகு வீடுகள் கட்டிவிடுவது பற்றி அரசின் கவனத்திலே இருக்கிறது. நம் கோடை வாசஸ்தலங்களுக்கு போதிய விளம்பரம் இல்லை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அந்த விளம்பரத்திற்கான ஏற்பாடுகளை விரைவிலேயே இந்த அரசு மத்திய அரசோடு கலந்து ஆவன செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: இங்கே புதிதாக திருமணம் ஆகிற இளம் தம்பதிகள் தங்களுடைய தேன் நிலவிற்காக காஷ்மீருக்கும், சிம்லாவுக்கும் போகிறார்கள். ஏனென்று கேட்டால், தமிழகத்திலே இருக்கிற கோடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களிலே தங்குவதற்கு "அவுஸ் போட்டுகளோ", ஓடி ஆடி விளையாட சிறந்த பூங்காக்களோ, இரவில் தங்க நல்ல ஓட்டல் வசதிகளோ இல்லை என்று சொல்லுகிறார்கள். அத்தகைய வசதிகளை எல்லாம் ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அத்தனை ஏற்பாடுகளும் இங்கே இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் எடுத்த சினிமா படத்திலே கூட இது எல்லாம் இருக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தப் பெரிய ஏரியை டெவலப் செய்ய வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி பரிந்துரை வழங்கப்பட்டிருக்கிறது. அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

(2) நடைமுறைக் கேள்வி

வினாக்களுக்கான விடைகளை விரைவுபடுத்துவது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், இந்த பேரவையில் வருகின்ற சில கேள்விகள் ஒரு மாதத்திற்கு முன்னதாகக் கொடுக்கப்பட்டு, அவைகளுக்கு பதில்கள் அப்போது தயார் செய்யப்பட்டிருக்கின்றன. வருகின்ற பதில்கள் எல்லாம் அப்-டு-டேட் ஆக இருக்கிறதா என்பதற்கு விளக்கம்தர வேண்டும். தொழில் அமைச்சர் அவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்னதாக உள்ள கேள்விக்கு அப்போதுள்ள பதிலைத்தான் சொன்னார்கள். ஆகவே, கேள்வி–பதில்கள் கொடுக்கின்ற நிலையில் குழப்பம் காணப்படுகிறது, தலைவர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தக் குளறுபடியும் காணப்படவில்லை. நம் எண்ணங்களில்தான் குளறுபடி இல்லாமல் இருக்க வேண்டும்.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]